## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2017

---

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும், நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றுக்கு பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படுவது அதனைப் பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னராக இருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் கொள்வனவு செய்யப்பட்ட திகதி கவனத்தில் கொள்ளப்படாமல் முழு வருடத்திற்காகவும் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொதுத் திறைசேரியிலிருந்து மூலதனச் செலவினங்களுக்காக அதிகாரசபைக்கு வருடாந்தம் மானியமாக கிடைக்கின்ற அரசாங்க மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் அதிகாரசபையினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு முறையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட ரூபா 52,345,094 கிரயமான சொத்துக்கள் பதிவளிக்கப்பட்ட பெறுமதியில் (WDV) பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 10,354,455 இனால் குறைவாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையினால் நடைமுறையல்லா சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்யப்படுவதாக கணக்கீட்டு கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 05 வருடங்களை விஞ்சிய எந்தவொரு சொத்தும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்குலான மற்றும் சிலாபம் வீடமைப்பு செயற்திட்டங்களுக்காக ரூபா 9,653,072 தொகை செலுத்தி அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்டிருந்த 2.43 ஹெக்டேயர் அளவான காணி நிதிநிலைமைக் கூற்றில் காணியின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் விற்பனை செய்யும் அடிப்படையில் அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 04 வீடமைப்பு உத்தேசத்திட்டத்திற்குரிய ரூபா 206,299,127 பெறுமதியான 124 வீடுகள் நடைமுறை சொத்தின் கீழ் இறுதி இருப்பாக காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறையல்லா சொத்தின் கீழ் வீடமைப்பு செயற்திட்டமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அநுராதபுரம் துறுஇதுறுகம வீடமைப்பு செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கு வரிசை அமைச்சிலிருந்து முன்னைய ஆண்டின் போது அதிகாரசபைக்கு கிடைத்த ரூபா 58,594,358 தொகை மானியத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக வருமான ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீள அறவிடும் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் கற்கை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த கடன்தொகை ரூபா 383,625 தொகை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது மீளக் கிடைத்த கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 164,061 தொகை பயிற்சிச் செலவினத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் பயிற்சிச் செலவினம் ரூபா 164,061 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது கிடைக்க வேண்டிய ரூபா 159,403 கடன் மீதியும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் உள்ள ஜீப் வண்டி ஒன்று 2016 திசெம்பர் 21 ஆந் திகதி அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் அதனை மதிப்பீடு செய்து நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அநுராதபுரம் ''துருஇதுருகம பசுமை குடியிருப்பு செயற்திட்டத்தின்'' 99 வீடுகள் 2013 ஆம் ஆண்டின் போது வீட்டு நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் 32 வீடுகளின் வீட்டு நலனாளிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைப் பணம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடையே அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 36,731,157 தொகையான கடன் மீதி ஒன்று காணப்பட்ட போதிலும், அந்த கடன் மீளாய்வு செய்யப்பட்டு போதியளவான பிரகாரம் ஐயக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கிடைக்கப்பெற்ற 03 வீட்டுத் திட்டங்களில் ரூபா 2.67 மில்லியன் கடன் தவணைப் பணத்தை அறவிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற வேண்டியதாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 207,331,767 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்தப் பெறுமதியை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 2016 இன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் அவ்வாறான மீதியொன்று செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிட வேண்டிய இடர் கடன் மீதி ரூபா 12,835,371 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 12,879,234 ஆனமையால் ரூபா 43,863 விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விசிறி வீட்டுக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் பெற வேண்டிய கடன் தவணைப் பெறுமதி ரூபா 23,986,390 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 14,711,505 ஆகவும் 1 வருடத்திற்கும் 2 வருடங்களுக்கும் மேற்பட்ட மீதி ரூபா 9,274,885 ஆகவும் இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்குரியதாக அறவிட வேண்டியதாக காணப்படுகின்ற அங்குலான வீட்டு வாடகை வருமானம் ரூபா 10,909,488 ஆக இருந்த போதிலும், ஆண்டின் போது அறவிடப்பட்ட வாடகை வருமானம் ரூபா 407,100 ஆனமையால் மொத்த வாடகை வருமானத்தில் 96 சதவீதம் அறவிடவேண்டிக் காணப்பட்டது.

(இ) துருஇதுருகம வீடமைப்புத் திட்டத்தின் விற்பனை அடிப்படையில் வழங்கப்பட்ட 25 வீடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 672,939 அறவிட வேண்டியிருந்த போதிலும், ரூபா 125,225 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிடப்படாதிருந்த தவணைப் பணங்களின் பெறுமதி 81 சதவீதமாக இருந்தது. அவ்வாறே புனருத்தாபன அடிப்படையில் வழங்கப்பட்ட 72 வீடுகளுக்காக ரூபா 1,135,512 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 167,640 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 86 சதவீதமான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாடின்றி அதிகாரசபையின் முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய அலுவலக வாடகை செலுத்துதல் கைவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வாடகை ரூபா 21,129,684 ஆகும்.

(உ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதிகாரசபையினால் சமூக அடிப்படையிலான சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 11,823,000 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாமல் காணப்பட்ட நிலுவை இடர் கடன் மீதி ரூபா 385,739 ஆக இருந்ததுடன் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான பெறுமதி ரூபா 250,379 ஆகும்.

(எ) சிங்ஹபுற வீடமைப்புத் திட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை வருமானம் ரூபா 1,557,000 ஆக இருந்ததுடன் அதில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே அறவிடப்படாமல் காணப்பட்ட மீதி ரூபா 707,000 தொகை அதாவது மொத்த வாடகை வருமானத்தில் 45 சதவீதமாக இருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிறுத்திவைத்தல் பணங்களின் (Retention) கூட்டுமொத்தம் ரூபா 1,299,416 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையே காணப்பட்ட மீதி ரூபா 1,106,284 ஆகவும், 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 110,561 ஆகவும் காணப்பட்டதுடன் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டம் | (i) நகரக் குடியிருப்பு அபிவிருத்திக்குரிய தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்காகவும், அந்தக் கொள்கையை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் தவறியிருந்தது. |
| | (ii) அதிகாரச்சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் தலைவர் ஒருவரை உள்ளடக்கிய 14 அங்கத்தவர்களை விஞ்சாத ஆலோசனைக் குழுவொன்று 2017 ஏப்ரல் அளவில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அந்தக் குழுவினால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அதிகாரசபையின் முன்மொழிவுகள், திட்டங்கள், செயற்திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் போன்ற அதிகாரசபையின் நோக்கங்களுக்குரிய பணிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) அதிகாரச்சட்டத்தின் 16(3) உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருந்ததுடன், அது பகுதிகளாக அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் அதிகாரசபைக்கு எந்தவித மூலதனமும் திரண்ட நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1982 இன் 45 ஆம் இலக்க இணைந்த வீடுகளின் உரித்து (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 20(ஏ) உப பிரிவு | அங்குலான வீடமைப்பு செயற்திட்டத்தை மக்களின் உரித்துக்கு கையளிப்பதற்கு இணைந்ததாக வீடமைப்புத் திட்டத்தின் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும், அக்குழுவைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த முகாமைத்துவக் குழுவைத் தாபிப்பதற்காக வீட்டு நலனாளிகளிடமிருந்து மிளாய்வாண்டின் இறுதியில் ரூபா 12,621,560 தொகை அறவிட்டு அதிகாரசபையின் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அக்குழுவைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வீடமைப்புத் திட்டத்தின் பராமரிப்புச் செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,203,520 தொகையொன்று அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) செயல்நிமித்த உப கட்டுநிதியைப் பெற்ற உத்தியோகத்தரால் அந்த பணி நிறைவு பெற்றதும் உடனடியாக கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதியில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 04 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 385,000 தொகையான உபகட்டுநிதி இவ்வறிக்கைத் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் 23 சந்தர்ப்பங்களில் 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 641,180 தொகையான உப கட்டுநிதியைத் தீர்த்து வைப்பதற்கு 27 நாட்கள் முதல் 103 நாட்கள் வரையிலான காலம் எடுத்திருந்தது.<br><br>(ii) பதவிநிலைத் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ரூபா 100,000 ஆகக் கூடியது வரை செயல்நிமித்த உபகட்டு நிதி வழங்க முடியுமாக இருந்ததுடன் அந்த எல்லையை விஞ்சக் கூடிய தேவை ஏற்படுமாயின் அதற்காக பொதுத்திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டில் உத்தியோகத்தர் ஒருவருக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 350,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2017 திசெம்பர் 11 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஊழியர் ஒருவருக்காக ரூபா 15,000 வீதம் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,507,500 தொகையான ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவு | கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படி போதியளவில் காணப்படாத விசேட சந்தர்ப்பங்களில் சரியான அங்கீகாரத்தைப் பெற்றதையடுத்து செலவிடப்பட்ட உள்ளபடியான எரிபொருள் செலவினம் மீளளிப்புச் செய்ய முடியுமாக இருந்த போதிலும், அந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மேலதிக எரிபொருளைப் பயன்படுத்தி அம்மாத இறுதியின் போது உரிய அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவு | அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட பொருட்களுக்குரியதாகக் கிடைத்த ரூபா 3,985,025 தொகை சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அகற்றுதல் நடவடிக்கைகள் பூர்த்தியானவுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விரிவான அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பொதுத்திறைசேரியின் உரிய பிரிவிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,844,291 பற்றாக்குறை இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 46,536,014 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 26,691,727 இனால் குறைவடைந்திருந்தது. வருமானச் செலவினத்திற்கான அரசாங்கத்தின் மானியம் ரூபா 20,464,450 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பற்றாக்குறை குறைவடைந்தமை தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 6,032,874 மிகையொன்றும் மற்றும் ரூபா 10,284,600 பற்றாக்குறையொன்றும் ஏற்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 207,344,767 மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், 2016 மற்றும் மீளாய்வாண்டின் போது பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் அது ரூபா 46,536,014 முதல் ரூபா 19,844,291 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 53,501,687 தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டு வரையிலும் மறைப் பெறுமதியை கொண்டிருந்த போதிலும், அது வருடாந்தம் தளம்பலடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 53,058,777 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்கள், கடந்த மூன்று வருடங்களின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வொன்று அந்தந்த பணிகளுக்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டள்ள உத்தியோகத்தர்கள் போன்ற தகவல்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) அரசாங்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகள் அதிகாரசபையின் நடவடிக்கைகளுக்காக கைப்பற்றுதல்.

(ii) நகர குடியிருப்புக்களில் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்புவதற்குரிய முன்மொழிவுகள், திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.

(iii) நகரத்தில் வாழ்வோர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை இனங்காண்பதற்குரிய மெய்மையாய்வு மற்றும் ஆய்வுகளை நடாத்துதல்.

(iv) தேசிய ரீதியில் பொருத்தமான நகர வீடமைப்பு கடன் உத்தேச திட்டத்தை அமுல்படுத்துதல்

(இ) மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய அளவு, அந்தந்த பணிகளுக்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான குறிகாட்டிகள் (Indicators) சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் திறைசேரி மானியத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

நிலைபேறான நகர குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை அதிகரிப்பதன் மூலம் அல்லது மிகவும் வசதியான வீட்டு வசதிகள் மற்றும் ஆகக்குறைந்த நகர வசதிகளுக்காக பொருத்தமான பிரதேசங்களை வழங்குவதன் மூலம் சேவை வசதிகள் குறைந்த நகர குடியிருப்புக்களில் வாழ்கின்ற நபர்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்புதல் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான நோக்கமாகும்.

அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றுதல் மற்றும் செயற்படுநிலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லுனாவ வீடமைப்பு செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 90 மில்லியன் செலவில் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 60 மில்லியன் மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஹொரண வீடமைப்பு செயற்திட்டத்துக்காக ரூபா 34 மில்லியன் செலவில் 75 சதவீத வேலை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 6.29 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அடையப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றம் 12 சதவீதமாக இருந்தது. மேலும், இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட ரூபா 668,200 அளவிலான நிதி மோசடிகளின் காரணமாக செயற்திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகள் வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட மோசடிகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2018 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காலி, ரஜ்கம நகர வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 137 குடும்பங்களின் வீடுகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் மீளாய்வாண்டில் ரூபா 63.20 மில்லியன் செலவில் 95 சதவீதத்தை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அடையப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றம் 83 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட செலவினம் ரூபா 52.65 மில்லியனாக இருந்தது.

(ஈ) அங்குலான சயுருபுற வீடமைப்பு செயற்திட்டத்தின் சந்தை தொகுதி மற்றும் கழிவு அகற்றுதல் நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 17.21 மில்லியன் தொகையான ஒப்பந்தத்தின் உடன்படிக்கைக் காலம் 2016 செப்தெம்பர் 27 ஆம் திகதி வரையில் முவடைந்த போதும் 2018 யூன் வரையிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கோ அல்லது செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆரம்ப அளவிடைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2.82 மில்லியன் தொகையான கழிவு அகற்றும் நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் அளவிடைப் பத்திரத்தை மீண்டும் திருத்தும் போது நீக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது. மேலும் அளவிடைப் பத்திர திருத்தம் மற்றும் ஒப்பந்த பெறுமதி ரூபா 18.77 மில்லியன் வரை அதிகரித்திருந்த போதிலும் ஒப்பந்தகாரருடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 05 வீடமைப்பு முன்மொழிவுத் திட்டங்களில் காணப்படுகின்ற 863 வீட்டு அலகுகளுக்குரிய 12.32 ஹெக்டேயர் காணியை பல்வேறு நிறுவனங்களில் இருந்து கையேற்பதற்கு 2011 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் காணிகளை கையேற்பதற்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக வீட்டு நலனாளிகளுக்கு காணி உரித்துறுதிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி மானியங்களின் மூலம் ரூபா 1,172 மில்லியன் செலவில் லுனாவ வீடமைப்பு உத்தேச திட்டத்திற்காக 380 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 மார்ச் 22 ஆந் திகதி விடயப் பொறுப்பு அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை குறிப்பின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் அந்த வீடுகளில் குடியிருப்பதற்கு மொரட்டுவ மாநகரசபை எல்லையில் வசித்துவரும் குறைந்த வசதிகள் உள்ள நகர குடியிருப்புக்களில் 356 குடும்பங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நகரத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக மலசலகூடங்களை அமைத்து பூர்த்தி செய்வதற்கு ஒரு மலசலகூடத்திற்கு ரூபா 17,189 தொகையான பொருள் ரீதியான உதவி மற்றும் ரூபா 10,000 நிதி ரீதியான உதவி என மீளாய்வாண்டின் போது 17.50 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 814 குடும்பங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த மாவட்டம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபைக்கும் நலன் பெறுனர்களுக்கும் இடையேயான உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் மலசலகூடத்தை அமைத்து பூர்த்தி செய்ய வேண்டி இருந்ததுடன் அவ்வாறு மலசலகூடம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத 380 குடும்பங்கள் தொடர்பாக அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையில் சேவையில் இருந்து நீக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,059,513 தொகையான கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டு முதல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 116,500 தொகையான 02 பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் கற்கை நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 256,000 கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது.

(எ) 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 14/1293/517/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபை தாபிக்கப்பட்டவுடன் உடனடியாக வரையறுக்கப்பட்ட ரீல் எஸ்டெட் எக்ஸ்வேன்ஜ் (தனியார்) கம்பனி இரண்டு மாதங்களுக்குள் கலைக்கப்பட்டு அக்கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ரூபா 7,929,972 தொகையான 05 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் எஞ்சிக் காணப்பட்ட ரூபா 12,499,801 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 16,038,231 தொகையான பொறுப்புக்கள் மற்றும் ரூபா 3,880,025 தொகையான வங்கி மீதி எதுவும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 ஒக்தோபர் 12 ஆந் திகதி கம்பனியின் 26 வெளித்தரப்பினருக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 19,024,421 தொகையில் 2015 ஒக்தோபர் மாதத்தின் போது 24 வெளித்தரப்பினர்களுக்காகச் செலுத்துவதற்காக அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட ரூபா 7,139,255 தொகையான காசோலை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 யூன் 12 ஆந் திகதிய 03/2015/01 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் சிலாபம் வீடமைப்பு செயற்திட்டத்தில் வீட்டு நலனாளிகளில் ஒரு வீட்டிற்கு ரூபா 915,148 தொகை வீதம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த வீடுகளின் நிர்மாணித்தல் தரம் கீழ் மட்டத்தில் காணப்பட்டமையின் அடிப்படையில் 2017 திசெம்பர் 18 ஆந் திகதிய 11/2017/24 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ஒரு வீட்டிலிருந்து அறவிடப்பட்ட தொகை ரூபா 700,000 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 12,263,436 ஆகும். மேலும் இந்த வீடமைப்பு செயற்திட்டத்தில் 57 வீடுகள் வீட்டு நலனாளிகளுக்கு வழங்குவதற்கு முன்னர் வீடு மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) திறைசேரி நிதிஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அங்குலான வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,179,062,714 தொகையில் 2015 ஆம் ஆண்டின் போது இலாபத்திற்கு எதிராக ரூபா 700,074,056 தொகை முறையான திட்டமொன்றைப் பின்பற்றாமல் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விசிறி கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் சேகரித்தலை ஊக்குவிப்பதற்காக 10 சதவீத தரகுப் பணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,051,711 தொகை

அதிகாரசபையினால் கடன் பணத்தைச் சேகரிப்பவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அங்குலான வீடமைப்புக் கடன் மற்றும் திரிய வீட்டுக் கடன் முதலாவது கட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் பணத்தை அறவிடும் செயல்முன்னேற்றம் முறையே 4 சதவீதம் மற்றும் 45 சதவீதம் என்ற கீழ்மட்ட பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் முன்னைய ஆண்டின் போது அனுராதபுரம் ''துறுஇதுறுகம'' மற்றும் சிலாபம் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்டிருந்த 59 வீட்டு நலனாளிகளுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்பனை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் அங்குலான வீடமைப்புத் திட்டத்திற்குரிய ரூபா 25.60 மில்லியன் பெறுமதியான 08 வீட்டு அலகுகள் மீளாய்வாண்டின் போது பணம் அறவிடப்படாமல் விடுவிப்புப் படி பத்திரம் மூலம் அகற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் அம்பாந்தோட்டை வீடமைப்பு செயற்திட்டத்தின் வீட்டு நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் பணம் ரூபா 3,656,154 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் பணத்திற்குரிய வட்டி திறைசேரியிலோ அல்லது வரிசை அமைச்சினதோ அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் அறவிடாமல் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த செயற்திட்டத்திற்காக அதிகாரசபையின் நிதியத்திலிருந்து வட்டியாக ரூபா 1,965,468 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நகர பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்க்கை நிலையை மேலே கட்டியெழுப்புதவற்காக 03 வீடமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் விசிறி வீடமைப்புக் கடன் வழங்குவதற்காக ரூபா 775.06 மில்லியன் பொதுத்திறைசேரியின் மூலம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நலனாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தவணைப் பணத்தின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 410.40 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 8.53 மில்லியன் அறவிடப்பட்டிருந்த போதிலும், அப்பணம் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் அதிகாரசபையின் வருமானச் செலவினத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 20 மில்லியனில் ரூபா 5.17 மில்லியன் தொகை அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்காத உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான சிங்ஹபுற, அநுராதபுரம் மற்றம் அங்குலான பிரதேசங்களில் காணப்பட்ட 03 வீட்டுத் திட்டங்களில் காணப்படுகின்ற 48 வீடுகள் 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்குமிடையிலான காலம் பாவனைக்கு எடுக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டமையின் காரணமாக அதிகாரசபைக்குச் சேகரிக்கக்கூடியதாக இருந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) சமுதாய புத்துயிரூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போதும் 2016 ஆம் ஆண்டின் போதும் ரூபா 2,662,065 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 ஜுக்கி தையல் இயந்திரங்கள் மற்றும் 110 சாதாரண தையல் இயந்திரங்கள் என்பவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் நான்கு பேர் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் அதற்கான சம்பளமாக ரூபா 1,888,797 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,615,208 தொகை மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையில் 02 பொறியியலாளர்கள் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அப்பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் அதிகாரசபையின் நிர்மாண நடவடிக்கைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பாதகமான நிலைமையொன்று எழுந்திருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 21 உத்தியோகத்தர்கள் அதிகாரசபைக்கு சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பதவிகளை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளீர்ப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடமைப்பு மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக 21 பயிலுனர்கள் (பயிற்சி) சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,792,250 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரியதாக அதிகாரசபையினால் தமது விடயப்பரப்பின் கீழுள்ள பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிபுபடுத்தாமையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைய வேண்டிய முறை, இலக்கை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகளும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1(ஆ) பந்தியின் பிரகாரம் நிர்மாண பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், பெறுகை நிறுவனத்தால் நிர்மாணங்களுக்குரிய காணி கையேற்றல் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டத்தை இடையூறு இன்றி அமுல்படுத்துவதற்காக தேவையான ஏனைய சகல விடயங்களையும் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 1,233,367,544 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த லுனாவ வீடமைப்புச் செயற்திட்டம் மற்றும் ரூபா 63,070,626 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தலவாக்கலை லிந்துல வீடமைப்பு செயற்திட்டத்திற்குரிய காணிகளின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.6 ஆம் பிரிவு மற்றும் 2016 சனவரி 25 ஆந் திகதிய 29 ஆவது மேலதிகத்தின் பிரகாரம் நிர்மாண வேலைகளின் ஒப்பந்தங்களிற்காக ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தும் போது நிர்மாண வழுக்களை மேவுகை செய்வதற்காக நிறுத்தி வைத்தல் பணம் (Retention) கழிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரருக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 42,298,416 தொகைக்குரிய இடைக்கால கொடுப்பனவுகளில் நிறுத்திவைத்தல் பணத்தைக் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.6 மற்றும் 2016 சனவரி 25 ஆந் திகதிய மேலதிக (Supplement) 29 இன் பிரகாரம், நிர்மாண ஒப்பந்தங்களுக்காக கழிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் பணம் (Retention) 50 சதவீத வேலை பூர்த்தி செய்து கையளிக்கப்பட்ட பின்னரும் எஞ்சிய 50 சதவீதம் வழுக்களின் பொறுப்புக்காலம் முடிவடைந்த பின்னரும் ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக ஒப்பந்தத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்படாத லுனாவ வீடமைப்பு செயற்திட்டத்திற்குரியதாக நிறுத்தி வைக்கப்பட்ட மொத்த தொகையான ரூபா 55,076,250 மற்றும் அதற்கு மேலதிகமாக ரூபா 6,507,164 தொகை என்பன உரிய ஒப்பந்தக்காரருக்கு 05 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) பிரிவின் பிரகாரம் எந்தவொரு அங்கத்தவரும் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்ற இரண்டிலும் சேவையாற்ற முடியாதிருந்த போதிலும், ரூபா 688,113 தொகையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்குரிய 02 பெறுகைகளின் போது ஒரே அங்கத்தவர் தரப்பினர் கேள்விகளைத் திறத்தல், தொழில்நுட்பக் குழுவையும் பெறுகைகள் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

(உ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.18(ஆ) பிரிவின் பிரகாரம், கேள்வி மதிப்பீட்டின் போது பெறுமதி சேர்வரி (VAT) கவனத்தில் கொள்ளப்பட முடியாதிருந்த போதிலும், அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட கசல பெறுகை மதிப்பீட்டின் போது பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த கேள்விதாரருக்கு அனுப்பப்பட்ட கூறுவிலைகள் வரி சேர்த்து பெறுமதியிலும், அந்த வரிக்காக பதிவு செய்யாத கேள்விதாரருக்கு அனுப்பப்பட்ட கூறுவிலைகள் வரி தவிர்த்து பெறுமதியிலும் மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளின் போது வரிக்காக பதிவு செய்யாதிருந்த கேள்விதாரருக்கு சாதகமான வகையில் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது.

(எ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3(ஆ) பிரிவின் பிரகாரம் கேள்வி மூடியவுடன் இயலுமானவரை விரைவாக கேள்வி திறத்தல் இடம்பெற வேண்டியிருந்ததுடன், கேள்விதாரரின் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி திறக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற ரூபா 1,627,640 பெறுமதியான 07 பெறுகைகள் கேள்வி கையேற்றல் முடிவடைந்த தினம் முதல் 03 நாட்களுக்கும் 110 நாட்களுக்கும் இடையிலான காலத்தில் கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன் கேள்வி திறப்பதற்காக கேள்விதாரர்கள் முன்னிலையில் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், வழிகாட்டிக் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் கேள்வி திறத்தல் குறித்த மாதிரிப் படிவத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபையினால் 05 வருட காலத்திற்காக வரி அடிப்படையில் 08 ஆசனங்களையுடைய 02 இற்கும் 16 இற்கும் இடையிலான ஆசனங்களையுடைய வேன் வண்டி என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக 2017 மார்ச் 23 ஆந் திகதி பெறுகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.2(இ) பிரிவின் பிரகாரம் கேள்வி கோரும் இறுதித் திகதி வரை முன்னராக கேள்வி கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யும் வழங்குனருக்கு இடமளிக்கப்பட வேண்டும். எனினும், மேற்கூறப்பட்ட பெறுகை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கேள்வி கோரும் இறுதித் திகதியான 2017 ஏப்ரல் 25 ஆன போதிலும் 04 தினங்களுக்கு முன்னர் அதாவது 2017 ஏப்ரல் 21 ஆம் திகதி வரை மாத்திரம் கேள்விகோரல் ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் கேள்விக்குரியதாக இருந்தது.

(ii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.1.4 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி கோரல் ஆவணங்கள் விநியோகிப்பதற்கு உரிய அறிக்கை ஒன்று வைக்கப்படாமையின் காரணமாக எவ்வளவு கேள்விதாரர்களின் எண்ணிக்கை கேள்வி பதிவேட்டில் பெறப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) பெறுகை அறிவித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் வாடகை அடிப்படையில் பெற வேண்டிய அதிகாரசபையின் வான் வண்டியின் தேவை 08 இருக்கைகள் உள்ள இரண்டு வான் வண்டிகள் மற்றும் 16 ஆசனமுள்ள வான் வண்டியொன்று மாத்திரமாக இருந்த போதிலும் இந்த பெறுகையின் கீழ் 16 ஆசனமுள்ள 03 வான் வண்டிகளை பெற்றுக்கொள்ளல் கணக்காய்வில் விளக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமைகளின் அடிப்படையில் அதிகாரசபைக்கு மாதாந்தம் மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த வாடகை ரூபா 70,000 ஆகும்.

**6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

**(அ) தலவாக்கலை லிந்துல வீடமைப்பு செயற்திட்டம்**

இந்த செயற்திட்டத்தின் கீழ் 100 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 84.5 மில்லியன் தொகை திறைசேரி நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்துக்காக திறைசேரி நிதிஏற்பாடாக ரூபா 76 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், நிதிஏற்பாடுகளில் 83 சதவீதம் அதாவது ரூபா 63.07 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்க வேண்டிய 100 வீட்டு அலகுகளில் 54 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வேலை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் 03 வருட கால அளவில் நலனாளிகளுக்கு வழங்கப்படாது மூடி வைக்கப்பட்டமையின் காரணமாக அந்த வீடுகளுக்கு கணிசமான அளவு நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அவற்றை புனரமைப்பதற்கு அதிகாரசபைக்கு மீண்டும் ஒரு தடவை செலவினங்களை செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை களக்கணக்காய்வு பரிசோதனையின் போது மேலும் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் வீடமைப்பு செயற்திட்டத்திற்குரிய காணியின் உரித்து இந்த அறிக்கை திகதி வரையிலும் அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டம் மூலம் புனருத்தாபன அடிப்படையில் 60 வீட்டு அலகுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 54 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் 06 நலனாளிகளுக்கு வீடுகள் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக புனருத்தாபனம் செய்வதற்கு உரித்தற்ற 16 வெளிநபர்களுக்கும் செயற்திட்டத்தில் வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) வீடமைப்பு செயற்திட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தின் ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த செயலாற்றல் பிணை முறி 2017 சனவரி 16 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும் ஒப்பந்த கால எல்லை நீடிக்கப்பட்டிருக்காததுடன் 2018 யூன் வரையிலும் ஒப்பந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) சிலாபம் வீடமைப்பு செயற்திட்டம்

சிலாபம் வீடமைப்பு செயற்திட்டத்தின் வடிகாண் முறைமையை அமைப்பதற்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2.86 மில்லியன் பொதுத்திறைசேரியில் இருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எனினும், நிர்மாணிப்பதற்காக 2017 ஏப்ரல் 19 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.2.1 இன் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக கேள்விதாரர்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த தகைமைகள் மற்றும் கருதுகோள்கள், கேள்வி காப்பீடு மற்றும் அதன் பெறுமதி, கேள்வி செல்லுபடியாகும் காலம், ஒப்பந்தகாலம் போன்ற தகவல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படாதிருந்தமையால் கூறுவிலைகள் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கூறுவிலை கோருவதற்கு அதிகாரசபை தீர்மானித்து இருந்தது. எனினும், 2018 யூன் 01 ஆம் திகதி வரையிலும் மீண்டும் கூறுவிலை கோருவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

### 6.1.3 தாமதமான செயற்திட்டம்

----------------------------------------------

அதிகாரசபையினால் முன்னைய ஆண்டின் போது நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 13.43 பில்லியனான கண்டி மஹியாவ நகர வீடமைப்பு செயற்திட்டத்தின் வேலை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தகைமை பெற்ற முதலீட்டாளரை செயற்திட்டத்திற்காக தெரிவு செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தமை இந்த நிலைக்கு தாக்கமளித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த செயற்திட்டத்துக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 997,801 ஆகும்.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக முன்னைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுத் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து சில செயற்திட்டங்களுக்குரிய துறைகளைப் பரீட்சிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுயசக்தி மனிதவள அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அதிகாரசபையின் செயலாற்றல் மதிப்பீட்டிற்குரிய நிகழ்ச்சித்திட்டம், திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சில வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 37 சதவீதம் முதல் 568 சதவீதம் வரையிலான கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) காலி, ரஜ்கம மற்றும் ஹொரண ஹேகலவத்த வீடமைப்புத் திட்டங்களின் விளம்பர நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 684,526 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செலவினத்திற்காக வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் தமது ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.5 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்**

அதிகாரசபையின் அலுவலகக் கட்டிடமொன்றைத் திருத்துவதற்காக இலங்கை நில மீட்டல், அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,891,911 தொகை தீர்த்து வைக்கப்படாமல் அதிகாரசபையின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றம் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனத் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சொத்துக்களும் பொறுப்புக்களும் சரியாக வகைப்படுத்தப்பட்டிருக்காமை |
| | (ii) சொத்துக்களின் கிரயத்தையும் பெறுமானத்தேய்வையும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | (i) உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்ற அரசாங்க மானியம் அந்த நோக்கங்களுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியமை மற்றும் அரசாங்க மானியங்களிலிருந்து செலவிடப்படாத மீதி திறைசேரிக்கு மீள அனுப்பப்படாமை. |
| | (iii) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் கடன் அறவிடும் செயல்முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடம் காணப்படுகின்ற அதிகாரசபையின் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் சில பதவிகள் சரியாக தரப்படுத்தப்பட்டிருக்காமை. |
| (ஈ) | பெறுகைகள் | (i) ஒவ்வொரு பெறுகைக்காகவும் தனிப்பட்ட கோவைகள் பேணிச்செல்லப்படுவதற்குப் பதிலாக ஒரு சொத்து தொகுதிக்குரிய சகல பெறுகைகளும் ஒரு கோவையில் பேணிச் செல்லப்பட்டமையின் காரணமாக பெறுகைகளை வெவ்வேறாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தமை.<br><br>(ii) பெறுகைகள் பிரிவின் பங்குபற்றலின்றி பெறுகைகளுக்காக செய்திப் பத்திரிகையில் பிரசுரித்தல் |
| (உ) | வாகனப் பதிவேட்டை பேணிச் செல்லல் | (i) வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களில் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பொன்று உள்ளடக்கப்படாமை<br><br>(ii) மாதாந்தம் அரசாங்கத்தின் வாகனங்களுக்காக பயன்படுத்திய எரிபொருள், ஓடிய கிலோமீற்றர் எண்ணிக்கை, மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்கள் போன்றவைகளை உள்ளடக்கி போக்குவரத்து சேவைகளுக்கான அட்டவணையொன்று தயாரிக்கப்படாமை. |